Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

42

# ஈழத்தழிழரிடையே சுந்தரது காட்டூன் சித்திரங்கள்.

வ.பாலமுருகன்
முதுநிலை விரிவுரையாளர் (ஓவியத்துறை) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை
balag555@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையின் வடபகுதியின் முதன்மையான மாவட்டமான யாழ்ப்பாணத்தின் காட்டூன் சித்திரங்கள் சமூகப் பிரச்சினைகள், தனிமனிதப் பிரச்சினைகள், அரசியல் போக்குகள் போன்றவற்றை நகைச்சுவையாக விமர்சிப்பதாகவும் கேள்விக்குள்ளாக்குவதாகவும் அமைகிறது. இது மக்களை சிந்திக்கத் தூண்டுவதாகவும் கலை என்றவகையில் அதன் அழகியல்ப் பண்பாலும் கருத்து வெளிப்பாட்டினாலும் மக்களால் ரசிக்கப்பட்டு மக்களை மகிழ்வூட்டுவதாகவும் காணப்பட்டு வருகிறது. இந்தவகையில் சிரித்திரன் சுந்தர் எனும் யாழ்ப்பாணத்துப் புகழ் பெற்ற காட்டூன் ஓவியரின் காட்டூன் சித்திரங்கள் அவற்றின் அமைப்பாலும் அவற்றின் வெளிப்பாட்டாலும் மக்கள் மத்தியில் எத்தகைய இடத்தினைப் பிடித்திருக்கின்றன என்பதை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது. இவ்வாய்வானது வரலாற்றாய்வு மற்றும் விவரண ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது.

திறவுச் சொற்கள்: காட்டூன், ஈழத்தழிழர்கள், நகைச்சுவை, அரசியல், யாழ்ப்பாணம்.

**அறிமுகம்**

காட்டூன் எனும் எண்ணக்கரு மத்தியகாலத்திலேயே தோற்றம்பெற்றது. ஆரம்பத்தில் காட்டூன் என்பது ஓவியத்தினதோ அல்லது சாயக்கண்ணாடி ஓவியத்தினதோ திட்ட வரைபுகளையே குறிப்பதாகவிருந்தது. 19ஆம் நூற்றாண்டிலிருந்து, லண்டனில் வெளியாகும் “பஞ்ச்”(Punch) எனும் பத்திரிகையின் ஆரம்பத்துடன் காட்டூன் என்பது நகைச்சுவை சார்ந்த சித்திரங்கள் எனும் கருத்தைக் கொள்ளத்துவங்கின. ஊடகங்கள் வளர்ச்சியடைய 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து காட்டூன்கள் என்றால் (Animation) எனும் பொருள் கொள்ளப்பட்டும் வருகின்றன.[1] இலங்கையைப் பொறுத்தவரையில் ஆங்கிலேயரது வருகைக்கு முன் இலங்கையில் காட்டூன் சித்திரங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னரே இலங்கையில் காட்டூன் சித்திரங்கள் தோன்றின. A.C.ஹொலட் இலங்கையின் புகழ் பெற்ற காட்டூன் ஓவியராவார். இலங்கையின் அன்றைய அரசியல்வாதிகள் பாம்பின் படத்தைக் கண்டு அஞ்சுவதுபோல ஹொலட்டின் படங்களைக்கண்டு அஞ்சினர் என்று கூறப்படகிறது.[2] யாழ்ப்பாணத்திலும் சமகாலத்திலேயே காட்டூன் சித்திரங்கள் தோன்றின. இலங்கையைப் பொறுத்தவரையில் அந்நியக்கலையான காட்டூன் வரைபுகள் உள்நாட்டு சமூகம் மற்றும் அரசியல் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தி இலங்கைக்குரிய பண்புகளைக் கொண்ட காட்டூன்களாகப் பரிணமித்தன. யாழ்ப்பாணத்துக் காட்டூன்ககள் ஈழத் தமிழ் மக்களது சமூக, பொருளாதார, கலாச்சார பிரச்சசினைகள் மற்றும் தனிமனித அடையாளங்களையும் வெளிப்படுத்துவதோடு உள்நாட்டு அரசியல்ப்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

போக்குக்களையும் விமர்சித்து ஈழத் தமிழர்கழுக்குரியதாக தனிப் பண்பைக் கொண்டு வளர்ச்சியடைந்தன.

யாழ்ப்பாண காட்டூன் சித்திரங்களை "சானா" எனும் ஓவியர் 1939 களில் ஈழகேசரிப் பத்திரிகையில் வரைந்தார். யாழ்ப்பாண மக்களின் நாளாந்த வாழ்க்கையில் நடமாடும் பாத்திரங்களை கண்முன்னே கொண்டுவந்து "யாழ்ப்பாணத்து மாலி" என அழைக்கப்பட்டார்.[3] இவரின் பின்வந்த "சுந்தர்" எனும் புனைபெயர் கொண்ட சிவஞானசுந்தரம் பலவகையான காட்டூன் சித்திரங்களை வரைந்து சாதனை படைத்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் பல காட்டூன் ஓவியர்கள் தோன்றினாலும் யாழ்ப்பாணக் காட்டூன் உலகில் சாதனை படைத்து ஈழத் தமிழ்மக்கள் மத்தியில் சிறந்த காட்டூன் ஓவியராகத் தன்னை நிலை நிறுத்திக்கொண்டவர் சுந்தர் ஆவார்.

இலங்கையின் வட பகுதியான யாழ்ப்பாணத்தின் கரவெட்டி எனும் கிராமத்தில் 03.03.1924 இல் பிறந்து 03.03.1996 இல் இயற்கை எய்தினனார்.[4] இவர் பம்பாயில் Sir J.J. School of Art இல் ஓவியம் பயின்றவர், இந்திய ஓவியர் ராஜ ரவிவர்மாவிடம் உருவங்கள் வரையக் கற்றுக்கொண்டார்.[5] 'லோக் சத்த' என்ற மராட்டியப் பத்திரிகையிலும் பிளிட்ஸ் (Blitz), கொஞ்ச் (Konch) எனும் ஆங்கிலப் பத்திரிகைகளிலும், இலங்கையின் பெரும்பாலான தமிழ்ப்பத்திரிகைகளிலும் இவர் காட்டூன்களை வரைந்தார்.[6] காட்டூன் ஓவியத்தை முதன்மைப்படுத்திய சிரித்திரன் எனும் மாத இதழை 1964ஆம் ஆண்டு முதல் வெளியிடத் தொடங்கினார். சிரிப்புடன் சிந்தனையைத் தூண்டும் சஞ்சிகையாய் அது அமைந்திருந்தது.[7] இலங்கையில் மட்டுமல்லாது இந்தியாவிலும் விரும்பி வாங்கப்படும் பத்திரிகையாக சிரித்திரன் விளங்கியது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெரு விருப்ப நூல்த்தொகுப்பினுள் பங்கேற்றுக் கொண்டதாக விளங்கியது.[8] 1991 ஆம் ஆண்டு சுந்தரது சிரித்திரன் நகைச்சுவைக் கொத்துக்கு இலங்கை அரசு சாகித்திய மண்டல பரிசு வழங்கியது.[9]

**காட்டூன் (Cartoon)**

காட்டூன் சித்திரங்கள் என்பது நகைச்சுவை உணர்வை முதன்மைப்படுத்தி அதனூடாக ஓர் கருத்தை வெளிப்படுத்திநிற்கும் வரைதல்கள் அல்லது சித்திரங்கள் எனலாம். ஏன்னோர் பிரிவில் காட்டூன் என்பது அனிமேஷன் (Animation) ஐ குறிப்பதாகவும் அமைகின்றது. காட்டூன் என்பது நகைச்சுவைச் சித்திரம் என்றும் பல சந்தர்ப்பங்களில் கேலிச்சித்திரங்கள் (Caricature) என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. ஆனால் கேலிச்சித்திரங்கள் சிறிய வேறுபாட்டைக்கொண்டவையாகும். கேலிச்சித்திரம் என்பது ஒருவரது உடல் அமைப்பை உண்மைத்தன்மையிலிருநந்து மாற்றும் அதேவேளை அவரை அடையாளப்படுத்தக்கூடிய அவரது விசேட தன்மையை கைப்பற்றி நகைச்சுவை பொருந்திய வகையில் வரைந்து வெளிப்படுத்துதலாகும்.[10] சிரித்திரன் சுந்தரது காட்டூன்க ளை சமூகம் சார்ந்த காட்டூன்கள், அரசியல் சார்ந்த காட்டூன்கள் எனப் பிரித்து நோக்கலாம் இவரின் சமூகம் சார்ந்த காட்டூன்களில் இடம்பெற்ற சில பாத்திரங்கள் மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற்று மிகவும் பிரபல்யமடைந்தன. சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மிஸ்டர் அன்ட் மிஸ்ஸிஸ் டாமோடிரன், மைனர் மச்சான், மெயில் வாகனத்தார் மற்றும் மகுடியார் என்பவை மிகவும் பிரபல்யமானவை. இவரது

எழுத்துக்கள் இல்லாத தனிக் காட்டூன்கள் மிகப் பொருத்தமான கருத்தினை வெளிப்படுத்திநிற்பதோடு வாசிக்கத் தெரியாதவர்கள்கூட ரசித்து மகிழக்கூடிய வகையில் அமைந்திருந்தன.


**சுந்தரின் பாத்திரத் தெரிவு**

இவரது காட்டூன் பாத்திரங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்ததற்கு இவரது பாத்திரத் தெரிவும் ஓர் காரணியாகும். சுந்தர் தனது பாத்திரத் தெரிவு சம்பந்தமாக, சவாரித்தம்பரும் சின்னக்குட்டியும் நாட்டுநடப்புக்களை அலசி ஆராயும் இயல்புடைய யாழ்ப்பாணத்து மக்களின் பிரதிநிதிகள் என்று கூறுகின்றார்.

**சுந்தரது காட்டூன் சித்திரங்கள்**

வேகமான சுயாதீனமான ரேகைகளினால் எழிமைப்படுத்தப்பட்ட உருவங்களால் கருத்தினை நகைச்சுவையாய் சொல்வது சுந்தரின் பாணியாகும். பெரும்பாலும் யாழ்பாணத்து மக்கள் விவசாயம் செய்தலைப் பிரதான தொழிலாகச்செய்துவந்தனர். திருமண நிகள்வில் தம்பதிகளை அறுகரிசி போட்டு வாழ்த்தும் மரபு காணப்படுகிறது. சுமூகத்தில் காணப்படும் பொருளாதாரப் பிரச்சினையை நகைச்சுவையாகக் கூறுவதாக இந்த அரிசித்தட்டுப்பாடு எனும் காட்டூன் அமைகிறது.







Mrs.டாமோடிரன் எனும் இக்காட்டூனில் தமிழ் மக்களிடம் ஊறிப்போயிருக்கும் வெளிநாட்டு மோகம் எவ்வாறு எமது கலாச்சாரத்தையும் மொழியையும் சீரழித்துவருகின்றதென்பதை நகைச்சுவையாகக் காட்டப்பட்டுள்ளது. இங்கே மூலைவிட்ட எல்லைக்கோடுகளைப் பாவித்து நவீன ஓவியப்பாணிகளுள் ஒன்றான கனவடிவவாதப் பாணியிலான காட்டூன் சித்திரமாக வரைந்து நவீனம் எவ்வாறு மரபை மாற்றி அமைக்கின்றது என்பதை குறியீடாக வெளிப்படுத்துகின்றார். தமிழ் என்பதை டமில் எனக் கூறுவதனூடக சுதேசிய மொழியை அந்நிய மொழி எவ்வாறு மாற்றுகின்றதென்பதையும் நவீன ஓவிய அணுகுமுறை எவ்வாறு காண்பிய மொழியில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதையும் ஒன்றுசேர வெளிப்படுத்துவதாக இக்காட்டூன் சித்திரம் அமைந்துள்ளது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இக் காட்டுன் சித்திரம் நாட்டின் அரசியல் அமைப்பிலுள்ள குறைபாட்டையும் அரசியல்வாதிகளின்






போக்குக்களையும் விமர்சிப்பதாக அமைகிறது. அரசியலில் நிற்பதற்கு வயதெல்லை கிடையாது, மிகவும் வயதான கண்பர்வை மங்கிய ஓர் அரசியல்வாதி கத்தரித் தோட்டத்து பொம்மை ஒன்றிடம் வோட்டுக் கேட்கின்றார். வயதான வேட்பாளரை வரையும்போது வயது முதிர்வைக் காட்டக்கூடியவகையில் ரேகைகளைப்பாவித்துள்ள அதேவேளை வசதியான வாழ்க்கையை வாழ்ந்து வரும் நபர் என்பதை வேட்பாளரின் உடலமைப்பின் மூலம் காட்டியுள்ளார். போலியான சிரிப்பும் போலியான கும்பிடுகையும் சிறப்பாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இக்காட்டுன் சித்திரம் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடை பெற்று வரும் காலத்தில் தமிழ் மக்கள் அனுபவித்த பலவகையான இன்னல்களில் ஒன்றான சோதனைச்சாவடித் துன்பத்தை நகைச்சுவையாக சொல்கிறது. உடற் சோதனை என்கின்ற பெயரில் பயணிகளின் உடமைகளை ஆராய்வதும், சிலசந்தர்ப்பங்களில் ஆடைகளை தளர்த்திக் காட்டும்படி வற்புறுத்தப்படுவதும் மக்களை வெறுப்பின் விளிம்பிற்கே கொண்டு சென்றது என்பதைக்காட்ட மெயில்வாகனத்தார் ஆடைகளைக் களைந்துவிட்டுக் கொளும்புக்குப் போவதாக அமைகிறது.

**முடிவுரை**

யாழ்ப்பாணத்தில்த் தோன்றிய காட்டுன் சித்திரங்களில் சிரித்திரன் சுந்தரது காட்டுன் சித்திரங்கள் தனித்துவம் வாய்ந்தவை. அவரது காட்டுன் சித்திரங்களைப் பார்க்கும்போது அவை அக்காலத்து யாழ்ப்பாண மக்களது வாழ்க்கை முறை, பேச்சுவழக்கு, நடை, உடை, பாவனை போன்றவற்றோடு யாழ்ப்பாண மண்ணின் வாசனையை நுகரக்கூடியவாறு அமைந்துள்ளது. யாழ்ப்பாண மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைப்பாடுகளை வெளிக்காட்டுவதோடு காண்பியல் மற்றும் கருத்தியல் ரீதியாக ஆழமான பல கருத்துக்களை வெளிப்படுத்தி மக்களை ரசிக்கவும் சிந்திக்கவும் வைக்கின்றன. தமிழ் மக்களுக்கே உரிய உடல் மொழி, நடை, உடை, சிந்தனை போன்றவற்றை வெளிப்படுத்தி தமிழ் மக்களுக்கே உரிய அடையாளங்களாகத் தம்மைக் கட்டமைத்துக்கொண்டு காலத்தின் கண்ணாடியாகவும் வரலாற்றில் இடம்பிடித்திருக்கின்றன. ஒரு படைப்பின் வெற்றிக்கும் நிலைத்திருப்புக்கும் சுயம் முக்கியமானதென்பதை நிரூபித்திருப்பனவாக சுந்தரின் காட்டுன் சித்திரங்கள் விளங்குகின்றன.

**அடிக்குறிப்புக்கள்**

1.) Jan Chilvers. The Oxford Dictionary of Art and Artists, Page 115., 2009
2.) சிவஞானசுந்தரம், சி. சிரித்திரன் சித்திரக் கொத்து, பக் 2., 1989
3.) கிருஷ்ணராஜா, சோ. தற்கால யாழ்ப்பாணத்து ஓவியர்கள், பக் 18., 1997
4.) https://sangam.org/2008/03/Siritharan_Sunthar.php?uid=2808
5.) சித்திரக் கலை- மேலதிக வாசிப்பு நூல், தரம் 11, பக் 46., 2016
6.) அரூபன். தேடலும் படைப்புலகமும், பக் 120., 1987
7.) https://en.wikipedia.org/wiki/Sirithiran
8.) www.sirithiran.com
9.) கிருபாகரன், இ. காண்பியக் கலை, பக் 38., 2016
10.) https://www.poynter.org/reporting-editing/2006/cartoon-vs-caricature/

**உசாத்துணை நூல்கள்**

1.) அரூபன். (1987) தேடலும் படைப்புலகமும், யாழ்ப்பாணம். தமிழியல்
2.) கிருஷ்ணராஜா, சோ. (1997) தற்கால யாழ்ப்பாணத்து ஓவியர்கள், யாழ்ப்பாணம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
3.) கிருபாகரன், இ. (2016) காண்பியக் கலை, முல்லைத்தீவு. வலயக்கல்விப் பணிமனை
4.) (2016) சித்திரக் கலை- மேலதிக வாசிப்பு நூல், தரம் 11, மஹரகம. தேதசிய கல்வி நிறுவகம்